ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2197/21 - 2020 ඔක්තෝබර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.10.15
*2197/21 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு, யாழ்ப்பாணம்- கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு திட்டத்தின் , கழிவு நீர் பம்பிக்கும் நிலையம் இலக்கம் 12 ஐ நிர்மாணிப்பதற்கு காணிப்பகுதி ஒன்று தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையைச் சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஒற்றோபர் 07.*
*தொடர்பு இல. 5/3/JA/01*

**அட்டவணை**

*வட மாகாணத்தின், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 81/J, கோட்டை (போர்ட்) கிராம அலுவலர் பிரிவில், வண்ணார் பண்ணை- நிரித (தென்மேற்கு) கிராமத்திலமைந்த, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. ஏ. அருள்நேசன் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 2842 ஐக் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 இனால் குறிப்பிடப்படும் கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த 0.0127 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள காணித்துண்டு.*

*காணித்துண்டு இலக்கம் : 01*
*காணியின் விஸ்தீரணம்: 0.0127 ஹெக்டயார்*

*காணியின் எல்லைகள்:*

*வடக்கு : வாய்க்கால் ;*
*கிழக்கு : சவக்காலை (சுடுகாடு) ;*
*தெற்கு : சவக்காலை (சுடுகாடு) ;*
*மேற்கு : அடிப்பாதை.*

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : (1) மாநகர சபை,*
*யாழ்ப்பாணம்.*

*10-1116*

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், றுவன்வெல்ல நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நீர் சேகரிப்புத் தாங்கியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்று அவசியமாக உள்ளதன் காரணத்தினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஒற்றோபர் 07.*
*தொடர்பு இல.: 5-2/KE/06*

**அட்டவணை**

*கேகாலை மாவட்டத்தின், புலத்கொஹுபிடிய பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 107டி, பனாபிடிய கிராம அலுவலர் பிரிவில் பனாபிடிய கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. எல்.சி. கே. லியனகே அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்டுள்ள திட்டப்பட இலக்கம் WB/R/2015/004 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பராவத்த என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 40 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு: இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி;*
*கிழக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி;*
*தெற்கு : வீதி (தோட்டம்);*
*மேற்கு : வீதி ( தோட்டம்) மற்றும் இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி .*

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : (1) களனிவெலி பெருந்தோட்ட நிறுவனம்,*
*இலக்கம் 400, டீன்ஸ் வீதி,*
*கொழும்பு -10.*

*10-1117*

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு உனவட்டுன கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் 6 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திர சாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*'லக்திய மெதுர',*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஒற்றோபர் 07.*
*தொடர்பு இல. 5-2/GL/21*

**அட்டவணை**

*காலி மாவட்டத்தின், ஹபராதுவ பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 137B , யக்தெஹிமுல்ல கிராம அலுவலர் பிரிவில் யக்தெஹிமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள உனவட்டுன கடற்கரை பக்கமாக உள்ள தேவாலய வீதியில் இலக்கம் 261 வீட்டுக் காணிக்கு அருகாமையிலுள்ள காணியிலிருந்து 15 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : ஓலந்த வாய்க்கால் ;*
*கிழக்கு : இலக்கம் 261 ஐ உடைய வீட்டுக் காணி ;*
*தெற்கு : தேவாலய வீதி;*
*மேற்கு : குறித்த காணியின் எஞ்சியுள்ள பகுதி மற்றும் தேவாலய வீதி.*

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : (1) திரு. சுனில் பல்லியகுரு,*
*யக்தெஹிமுல்ல,*
*உனவட்டுன.*

*10-1118*

---

*திருத்தம்*

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவு*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சராகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், இலக்கம் 2063/36 மற்றும் 2018.03.22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் 2A மற்றும் 3A ஆம் பக்கங்களில் இலக்கம் 04- 274 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையில் காணி அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவு இலக்கம்*

532 C வத்தேகெதர என சுட்டிக்காட்டப்படுள்ளதாயினும் அது 533 D கிழக்கு பொரலஸ்கமுவ என திருத்தியமைக்கப்பட வேண்டுமென 1974ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், இத்தால் அறியத்தருகின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, 'லக்திய மெதுர',
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2020, ஒற்றோபர் 07.
தொடர்பு இல. 5/2/2/1309

10-1119